# பசிபோக்கிய சூரியன்!



திராவிட மாடல் அரசின் பேரரசர் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் "முதலமைச்சர் காலை சிற்றுண்டி திட்டம்" தமிழ்நாடு முழுவதும் விரிவுப் படுத்தப் பட்டுள்ளது. சுமார் 17 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தற்போது பசியாறிக்கொண்டிருக்கிறது! வயிற்றுப்பசி இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கி அறிவை மட்டுமே தேடும் மாணவச் செல்வங்களை உருவாக்குவதை தனது இலட்சியமாக கொண்டு செயல்படுகிறார் முதலமைச்சர் அவர்கள்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இத்திட்டத்தை இந்தியா ஒன்றியத்தின் அனைத்து மாநிலங் களிலும் செயல்படுத்த வேண்டும் என மாநில அரசுகளும், அம்மாநில உயர் அலுவலர்களும் ஆர்வம் செலுத்த தொடங்கியுள்ளார்கள்.

தங்களின் உரிமைகளுக்காக பல ஆண்டுகள் போராடி வெற்றிபெற்ற மக்கள் நிறைந்த மாநிலம் தெலங்கானா. சமீபத்தில் (29/08/2023) அந்த நிலத்தில் உள்ள அரசுப் பள்ளியை பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. அம்மாநிலத்தில் உள்ள Balapur மாவட்டம் Jillelaguda பகுதியில் அமைந்துள்ள CHALLA LINGA REDDY நினைவு ZILLA PARISHAD அரசுப் பள்ளியினை பார்வையிட்டோம்.

அம்மாநில பள்ளிக் கல்வித்துறை உயர் அதிகாரி திருமிகு.தேவசேனா அவர்களும், அம்மாநில கல்வித்துறை உயர் அலுவலர்களும் எங்களுடன் பயணித்து அம்மாநிலத்தில் செயல்படும் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை எடுத்துரைத்தார்கள்.



அன்பில்
மகேஷ் பொய்யாமொழி
திருச்சி தெற்கு
மாவட்டச் செயலாளர்
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

நமது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள் குறித்தும் அறிந்துவைத்திருந்தார்கள். குறிப்பாக நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து "தேசிய கல்விக் கொள்கையை" எதிர்த்து வருவது குறித்தும், அதனை தொடர்ந்து மாநில கல்விக் கொள்கை அமைப்பதற்காக குழு அமைக்கப்பட்டது குறித்தும் கேட்டறிந்தார்கள்.

25.08.2023 அன்று விரிவுப் படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பயின்ற பள்ளியில் தொடங்கி வைத்தார். அதுகுறித்து ஆச்சர்யத்துடன் கேட்டறிந்து நமது தமிழ்நாட்டிற்கு வருகைதர ஆர்வமாக உள்ளதாக திருமிகு.தேவசேனா அவர்களும், அம்மாநில கல்வித்துறை உயர் அலுவலர்களும் விருப்பம் தெரிவித்தார்கள்.

காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் முறை பற்றியும், நிதி ஒதுக்கீடு, மாணவர்களின் பயன் ஆகியவற்றை பற்றி களத்தில் நின்று அறிந்துகொள்ள விரும்புவ தாக தெரிவித்தார்கள். தங்கள் மாநிலத்திலும் இத்திட்டத்தை செயல் படுத்த தெலங்கானா முதலமைச்சர் சந்திர சேகர ராவ் அவர்களும், கல்வித்துறை அமைச்சர்சபிதா இந்திர ரெட்டி அவர்களும் விரும்புவதாக தெரிவித்தார்கள்.

தெலங்கானா மாநிலத்தின் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் அவர்களின் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களையும், அவரின் போராட்ட குணத்தையும் பாராட்டி, தங்களை வரவேற்க தமிழ்நாடு எப்போதும் தயாராக உள்ளது என வரவேற்றோம்.

"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" எனும் பெயரில் தெற்கிலிருந்து எழுந்துள்ள சூரியன் இந்திய ஒன்றியத்தில் உள்ள மாணவர்களின் வயிற்றுப்பசியை போக்கட்டும்! அவர்களுக்கு அறிவுப்பசி மட்டுமே இருக்கட்டும்!

# உண்டி கொடுப்போம்; கல்வி வளர்ப்போம்!

## 'ஆனந்த விகடன்' தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, செப். 1-

ஒரு நாட்டின் உண்மையான வளம், குழந்தைகள்தான். சத்துணவு தந்து, நறகல்வி தந்து குழந்தைகளை வளர்த்தெடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது. இதை நன்குணர்ந்தே, இந்தியாவுக்கே முன்னோடி யாக தமிழகத்தில் அரசுப்பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் நம் தலைவர்கள். சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த பி.டி.தியாகராயர் தொடங்கி முதல்வர்களாக இருந்த காமராஜர், எம்.ஜி.ஆர், கலைஞர், ஜெயலலிதா வரை பலருக்கும் இந்த நற்பணியில் பங்குண்டு.



பெரும்பாலும் அரசுப்பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோர் இருவருமே வேலைக்குச் செல்வதால் 50% பிள்ளைகள் காலை உணவு சாப்பிடாமலே பள்ளிக்கு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தேசிய குடும்ப நல கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் பதின்பருவத்தில் இருக்கக் கூடிய 52.9% சிறுமிகளும், 24.6% சிறுவர்களும் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தச்சூழலில் தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' மிகவும் பாராட்டுக்குரியது, வரவேற்கத்தக்கது.

கடும் போட்டியும் பாகுபாடும் நிலவும் சூழலில், குழந்தைகள் நிம்மதியாக வகுப்பறையில் அமர்ந்து படிக்க முதலில் அவர்களின் பசியாற்ற வேண்டும். அப்போதுதான் அவர்களின் கவனம் கல்வியில் குவியும். இதை உணர்ந்தே தமிழ்நாடு அரசு இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருக்கிறது.

30,122 அரசு தொடக்கப் பள்ளிகளில் 5ம் வகுப்பு வரை பயிலும் 18 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள். முதற்கட்டமாக, சோதனை அடிப்படையில், ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகளுக்கு இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது. அதன் விளைவு, திட்டம் செயல்படுத்தப்பட்ட பள்ளிகளில் வருகைப்பதிவு அதிகரித்திருக்கிறது. இதைத் தொடர்ந்து தற்போது இந்தத் திட்டம் அனைத்துத் தொடக்கப்பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உணவின் தரத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு பள்ளி மேலாண்மைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது சிறந்த முடிவு.

ஒரு குழந்தைக்கு இந்த வயதில் என்னென்ன சத்துகள் எந்த அளவில் தேவைப்படுகின்றன என்பதை ஒரு நிபுணர் குழுவுடன் ஆலோசித்து, தினசரி காலை உணவுகள் திட்டமிடப்பட்டுள்ளன. "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் வருங்காலங்களில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பதோடு பிள்ளைகளின் கற்றல் திறனும் அதிகரிக்கும், ரத்த சோகை போன்ற சத்துக்குறைபாட்டு நோய்களும் கட்டுக்குள் வரும்" என்கிறார்கள் கல்வியாளர்கள். தவிர பெற்றோரின் சங்கடத்தையும் சிரமத்தையும் இந்தத் திட்டம் குறைக்கும்.

தமிழகத்தில் முதன்முதலாக மதிய உணவுத் திட்டம் கொண்டு வந்தபோது, சிலர் கடும் விமர்சனங்களை எழுப்பினார்கள். ஆனால் பின்னர் அதையே முன்னுதாரணமாகக் கொண்டு இந்தியா முழுவதும் அத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இப்போது காலை உணவுத் திட்டம் மூலம் மற்றுமொரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறார் தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலின்.

இருவேளை அன்னமிட்டு எழுத்தறிவிக்கும் தமிழக அரசின் பணி, மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. ஆரம்ப அக்கறை காலப்போக்கில் குறைந்துவிடாமல், ஊழல் நுழைந்து தரத்தைக் குறைத்துவிடாமல் இது தொடர வேண்டும். இதை முறையாகக் கண்காணித்துத் தரமாகத் தர வேண்டிய சமூகப் பொறுப்பைப் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் சரியாகச் செய்ய வேண்டும்.

நன்றி:
ஆனந்த விகடன்
06.09.2023

## தமிழ்நாடு முழுவதும்

# சேதமடைந்த கட்டடங்களை கண்டறிந்து அப்புறப்படுத்துவீர்!

## மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு தலைமைச் செயலாளர் கடிதம்!

சென்னை, செப்.1-

தமிழ்நாடு முழுவதும் சேதமடைந்துள்ள கட்டடங்களைக் கண்டறிந்து அப்புறப்படுத்த உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் சேதமடைந்துள்ள பொதுக் கட்டடங்கள் மற்றும் இதர கட்டுமானங்கள் குறித்து ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஏதுவாக, சேதமடைந்த மற்றும் சிதிலமடைந்த கட்டடங்கள் மற்றும் இதர கட்டுமானங்களை கண்டறிவது என்பது மிகவும் அவசியமாகிறது. ஆகவே, சேதமடைந்துள்ள பொதுக் கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், விடுதிகள், பேருந்து நிலையங்கள், அலுவலக கட்டடங்கள் மற்றும் இதர முக்கிய உட்கட்டமைப்புகளான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், பாலங்கள் ஆகியவை குறித்து ஒரு ஒருங்கிணைந்த மதிப்பீடு மற்றும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி பின்வரும் இனங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது,

அதன்படி சேதமடைந்த மற்றும் சிதிலமடைந்த கட்டடங்களைக் கண்டறிந்து தொடர்புடைய துறைகள் மற்றும் முகமைகளுடன் ஒருங்கிணைந்து அனைத்து பொது மற்றும் அரசு கட்டடங்கள் மற்றும் இதர உட்கட்டமைப்புகளை முழுமையாகக் கணக்கெடுப்பு செய்ய வேண்டியும், அவற்றில் சேதமடைந்துள்ள அல்லது சிதிலமடையும் தருவாயில் உள்ளவற்றைக் உறுதி செய்து மேல் நடவடிக்கைக்காக அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

அத்துடன் கட்டமைப்பு உறுதியாக உள்ளதா அல்லது சேதம் மற்றும் சிதிலம் அடைந்துள்ளதா என்பதை மதிப்பீடு செய்து அதன் உறுதி தன்மை உறுதியாக இருப்பது கண்டறியப்பட்டால் பழுதுநீக்க நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டு பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டும்.

சிதிலமடைந்த கட்டமைப்புகள் மற்றும் அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ள கட்டடங்கள் இருப்பது ஆய்வின்போது தெரிய வந்தால் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக இடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

சேதமடைந்த மற்றும் சிதிலமடைந்த கட்டடங்களில் உரிய பழுதுநீக்கப் பணிகள் அல்லது மறுகட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் வரை சேதமடைந்த கட்டடங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதை தெளிவாக அறிவிக்க வேண்டும்.

மேலும் முக்கியத்துவம் வாய்ந்த பொது இடங்களான பள்ளிகள், கல்லூரிகள், விடுதிகள், மருத்துவமனைகள், ஆரம்ப நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் இதர முக்கிய கட்டமைப்புகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இம்முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே, வருகிற 30.09.2023க்குள் பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்து பொதுமக்களின் நலன் பேணப்பட வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு மாவட்டங்களிலும் கண்டறியப்பட்டுள்ள கட்டடங்களில் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட கட்டடங்கள் மற்றும் சிதிலமடைந்து இடிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் ஆகியவை குறித்து ஒரு விரிவான மற்றும் முழுமையான அறிக்கையினை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்புவதில் கவனம் செலுத்திட வேண்டும்.

எனவே, பொது மக்களின் பாதுகாப்பு நலனை உறுதி செய்வது நமது தலையாய கடமையாக கருதி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் உயர் அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு இந்நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை அரசினுடைய மேலான கவனத்திற்கு கொண்டு செல்வதையும் உறுதி செய்ய வேண்டுமென தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கடிதம் வாயிலாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளார்.


பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 5

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.5.ந.க.எண்.இ1 / 7384 / 2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தம் அறிவிப்பு**

பகுதி-12, வார்டு-52ற்குட்பட்ட கல்லறை சாலையில் உள்ள அண்ணா பூங்காவில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து யோக மேடை மற்றும் SS Handrail அமைக்கும் பணிக்கு மண்டல அலுவலர் - 5 அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றன

**பணியின் மதிப்பு ரூ.61,72,000/- ஆகும்**

ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின்னணு ஒப்பந்தத்தில் நாள்.18.09.2023 பிற்பகல் 3.00 மணிக்குள் பங்கேற்கலாம். 19.09.2023 அன்று பிற்பகல் 3.30 மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 4853 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மண்டல அலுவலர் - 5


## முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை இழிவுபடுத்துவதா?

# 'தினமலர்' நாளேட்டுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, செப்.1-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
**தானம் தவர் உயர்ச்சி தாளாண்மை தேனின்**
**கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்."** என்று பசியின் கொடுமை பற்றி தமிழ் மூதாட்டி அவ்வை சொன்னார்.



பள்ளிக்குப் போகும் குழந்தைகள் காலை உணவு இன்றி பசியோடு சென்றால் உடல் சோர்வும் மனச்சோர்வும் அடைந்து கல்வி கற்பதில் பின்னடைவு ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டுதான் அரசு பள்ளிகளில் படித்து வரும் இலட்சக்கணக்கான ஏழை எளிய குடும்பத்து பிள்ளைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று மதுரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, மேலும் விரிவு படுத்தப்பட்ட காலை உணவு திட்டத்தால் 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் பயிலும் 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

நீதிக் கட்சி காலத்திலேயே சர்.பிட்டி. தியாகராயர் சென்னை மாநகர தந்தையாக இருந்த போது 1928 ஆம் ஆண்டு மதிய உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் மதிய உணவு திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.

அதன் பிறகு பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியிலும், பின்னர் வந்த எம்.ஜி.ஆர் ஆட்சியிலும் மதிய உணவு திட்டம் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டதால் லட்சக்கணக்கான ஏழை எளிய குழந்தைகள் பசியின்றி பள்ளிக்கு சென்று கல்வி கற்கும் நிலை உருவானது. சத்துணவில் முட்டை வழங்கும் திட்டத்தை டாக்டர் கலைஞர் செயல்படுத்தினார்.

இந்நிலையில் தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவு திட்டத்தைக் கொண்டு வந்து தமிழ்நாடு கல்வித் துறையில் முன்னேற வழி வகை செய்தார். இலட்சக்கணக்கான குழந்தைகள் பயன்பெறும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தினமலர் நாளேடு இழிவுபடுத்தி செய்தி வெளியிட்டுள்ளது கடும் கண்டனத்திற்குரியது.

சமூக நீதிக்கு எதிரான ஆணவ ஆதிக்க ஆரிய சனாதன மனப்பான்மை தினமலர் நாளேடு வெளியிட்ட செய்தி மூலம் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது. தினமலரின் திமிருக்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

பள்ளிக் குழந்தைகளின் காலை உணவு திட்டத்தை இழிவுபடுத்திய தினமலர் நாளேடு மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.


## மும்பை ம.சேசுராசுவின்

# சகோதரியின் கணவர் மார்டின் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

மும்பை, செப். 1-

மும்பை திமுக முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் ம.சேசுராசு அவர்களின் சகோதரி எம்.பனிமயத்தின் கணவரும் காரைக்குடி நகர 11-வது வார்டு திமுக முன்னாள் பிரதிநிதி அ.மார்டின் வயது 59 அவர்கள் 30.08.2023 பிற்பகல் 3 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரது நல்லடக்கம் இன்று



(1.9.2023 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு வ.உ.சி ரோட்டில் உள்ள சிட்டி வியூ அப்பார்ட்மென்டில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கழனிவாசல் ஆவின் பால் பண்ணை அருகில் உள்ள கிறுத்துவ கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

செய்தியறிந்ததும் கழகத்தினர் திரளாகச் சென்று மறைந்த மார்டின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கும் உற்றார் உறவினர்களுக்கும் மும்பை நகரத் தி.மு.க. மற்றும் பாந்திரா திமுக சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.



வட கிழக்கு பருவமழை தொடங்கும் நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தூர்வாரும் பணியை எழும்பூரில் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் அரசு அதிகாரிகள் – கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

### செப்டம்பர் 1 (2018)



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் 'கலைஞர் தமிழ் மன்றம்' தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.